மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.65/2019</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 05ம் நாள் வியாழக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>05.02.2026 வா.சா.2 ஆஜர் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதி அழைத்ததன் பேரில்தான் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஆம்ஸ்ட்ராங் நிறுவனத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து பணிபுரிந்து வந்தேன் என்று சொல்லி உள்ளதற்கு நான் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. நான் பிகாம் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் ஆரம்பத்தில் டிரைவராக பால் வண்டிகளுக்கு வெளியூருக்கு வேலைக்கு சென்று வந்தேன் என்றால் சரிதான்.

2. வாதி மற்றும் பிரதிவாதிகள் நடத்தி வந்த நிறுவனத்தில் நான் ஆரம்பத்தில் டிரைவர் வேலைக்கு தான் வந்தேன் என்றால் இல்லை

அலுவலக பணிக்கு தான் வந்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் நான் ஆரம்பத்தில் டிரைவராக இருந்து உபயவாதிகள் கம்பெனிக்கு டிரைவர் வேலைக்கு தான் வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நான் டிரைவராக பள்ளியில் படிக்கும்போது தான் வேலை பார்த்தேன். படித்து முடித்ததற்கு பின் நான் டிரைவர் வேலைக்கு செல்லவில்லை

(ஆவணங்கள் பார்வையிட வேண்டுமென்ற 1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் வா.சா.2 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.05 18:15:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்